# புராண படனம் : அன்றும் இன்றும்

திருமதி. யோகேஸ்வரி கணேசலிங்கம்

புராணபடனம் இந்துக்களுடைய சமய வாழ்வோடு இரண்டறக்கலந்து விளங்கிய ஓர் அம்சமாகும். சைவ ஆலயங்களிலே வருடாந்த உற்சவம் ஆரம்பமாவதற்கு முன்னரும், குறிப்பிட்ட சில விரத நாட்களிலும் புராணம் படிக்கும் மரபு இன்றும் இருந்துவருகின்றது. கந்தபுராணம், பெரிய புராணம் போன்ற சமய நூல்களையோ அன்றேல் விரதமகிமைகூறும் நூல்களையோ ஒருவர் படிக்க, அதற்கு இன்னொருவர் உரைவிளக்கம் கூறுவதே புராணபடனம் ஆகும். புராணப்படிப்பை விதிப்படி மெய்யன்போடு நியமமாகக் கேட்பவர்கள் நோய்நீக்கம், சத்துருஜயம், புத்திரபாக்கியம் ஆகிய பயன்களைப் பெற்றுப் பலராலும் போற்றப்படுவார்கள் என்ற நம்பிக்கையும் மக்கள் மத்தியிலே நிலவியது. புராணம் படிப்பவர் விதிப்படி படிக்க, அப்படிப்பைக் கேட்பவர் 'சித்திரப் பாவையின் அத்தக' இருந்து கேட்ட ஒரு காலப்பகுதியே புராணபடனம் செல்வாக்குப் பெற்று விளங்கிய காலமாகும். ஆனால் அப்புராணப் படிப்பானது இன்று சமய வாழ்வில் இடம்பெற்றிருந்தபோதும், தான் பெற்றிருந்த செல்வாக்கை மக்கள் மத்தியில் முழுமையாகப் பெற்றிருக்கின்றது என்று கூறிவிடமுடியாது.

ஆலயங்களிலே நடைமுறையில் இருந்துவருகின்ற இப்புராணபடனம் எப்போ ஆரம்பமாகியது, யாரால் ஆரம்பிக்கப்பட்டது என்பதனை உறுதியுடன் கூற முடியவில்லை. ஆயினும் இம்மரபானது இலங்கையிலே பிரபல்யம்பெற்றுப் பலரையும் தன்பால் ஈர்த்தகாலம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதி என்பதை நாம் அறிய முடிகின்றது. இப்பண்பினை நன்கு விளங்கிக்கொள்வதற்கு ஆறுமுகநாவலர் (*1822 — 1879*) காலப் பின்னணியை விளங்கிக் கொள்ளுதல் அவசியமாகும்.

ஆறுமுகநாவலர் காலத்திலே இலங்கையில், சிறப்பாக யாழ்ப்பாணத்தில் ஐரோப்பிய நாடுகளிலிருந்து வந்த கிறிஸ்தவ சமயப் பாதிரிமார்களினால் கிறிஸ்தவ சமயப்பிரசாரம் வெகு வேகமாக நடந்துகொண்டிருந்தது. 'நல்வழி காட்டுவோம், உடுபுடவை சம்பளம் நாளுந் நாளுந் தருவோம்' எனக் கூறிச் சைவசமயிகளை மதமாற்றம் செய்வதில் கிறிஸ்தவப் பாதிரிமார் ஈடுபட்டிருந்தனர். அரசியல் செல்வாக்குப்பெற்ற இப் பாதிரிமாரது வாக்கு வன்மையாலும், அவர்களிடம் பெறும் சலுகைகளாலும் கவரப்பட்ட சைவர்கள் பெருமளவில் கிறிஸ்தவர்களாகினர். கிறிஸ்தவர்களது கையிலிருந்து சைவத்தைச் காத்தல் தனது தலையாய கடன் எனக் கருதிய நாவலர் தனது வாழ்வையே சமயப் பணிக்காக அர்ப்பணித்தார். சைவர்களை மதமாற்றம் செய்த கிறிஸ்தவர்களுக்கு எதிராக ஓர் இயக்கத்தையே நடாத்தி அதில் பெருமளவு வெற்றியும் பெற்றார். சைவசமயத்தின் பெருமையையும், உண்மையையும் மக்களுக்கு விளக்கி மக்களை விழிப்படையச்செய்த பெருமை நாவலருக்கே உரியது. இவ்வாறு சைவ சமயம் கிறிஸ்தவர்களது வாளுக்குப் பலியாகாமல் தொண்டாற்றிய நாவலரது பணிகளுள் சைவப்பிரசங்கமும் அதனோடு சேர்ந்த புராணபடனமும்

அடங்கும். படிப்பறிவற்ற மக்களுக்குத் தனது கருத்துக்களைச் சொற்பொழிவாக்கி விளக்குதல் எளிதுஎன்று எண்ணிய நாவலர் கந்தபுராணம், பெரியபுராணம் போன்ற சைவ இலக்கியங்களிலே மக்களுக்குப் பயிற்சியையும், ஈடுபாட்டையும் அளிக்கவேண்டிப் புராணபடனத்தைச் சைவ ஆலயங்களிலே ஆரம்பித்தார். நாவலரது சமயப்பணி வண்ணார்பண்ணைச் சிவன் கோவிலிலே ஆரம்பமாகியது. பிரதி வெள்ளிக்கிழமை தோறும் ஆலய வழிபாட்டிற்கு ஒன்றுகூடிய மக்களைக் கோவில் மண்டபத்திலே அமர்த்திச் சமயக் கருத்துக்களை மக்கள் இலகுவில் விளங்கிக் கொள்ளக் கூடிய முறையிலே எளிமையாக எடுத்துக்கூறினார். மக்களுக்கு ஏற்ற விதமாக நாவலர் கூறிய கருத்துக்களுக்குக் காலகதியில் பொதுமக்களிடையே செல்வாக்கு ஏற்படலாயிற்று. சமய நூல்கள் எவை, அவை என்ன கூறுகின்றன என்று அறியும் அளவிற்குக் கல்வியறிவினைப் பெறாத மக்களுக்கு நாவலர் அக்கருத்தினை எளிமையாக்கிப் பொருள் விளக்கம் கூறவே மக்களுக்குச் சமய நூல்களில் ஈடுபாடு ஏற்படலாயிற்று. இதனால் புராணபடனம் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றுச் சைவாலயங்கள் புராணம் படிக்கும் நிலையங்களாகின.

இவ்வாறு நாவலர் என்ன நோக்கத்திற்காகப் புராணபடனத்தை ஆரம்பித்தாரோ அந்நோக்கம் அவர் காலத்திலேயே நிறைவேறியது. யாழ்ப்பாணத்தின் பல ஆலயங்களிலும் புராணம் படிக்கும் மரபு ஆரம்பிக்கப்படலாயிற்று. இம்மரபு வளர்ந்து, வளர்ந்து நாவலரது மாணாக்கரும், மருகருமாகிய வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலம்பிள்ளை (*1836 — 1902*) காலத்திலே பொதுமக்களை ஆட்கொள்ளும் ஆற்றல்மிக்க ஒரு மக்கள் தொடர்பியல் முறையாக மாறியது. அவர் வரலாற்றின் மூலமாக இதனை நாம் அறிய முடிகின்றது. நாவலர் புராணம் படிக்க, மருகர் பொன்னம்பலம்பிள்ளை உரை கூறும் புராணபடனத்தை அக்கால இந்துக்கள் விரும்பிக் கேட்டனர். இவர்கள் இருவரும்கலந்து கொண்ட கந்தபுராணப் பகுதி பேரறிஞர்களாற் புகழ்ந்து பேசப்படுபவை. நாவலர் காலத்திலே அவரோடு கூடவே புராணபடனங்களுக்குச் சென்ற பொன்னம்பலம்பிள்ளை அவர் காலத்தின் பின்னர் அவரிடத்தை நிரப்பிவிடுகின்றார். ஓர் இயக்கவாதியாகப் பல இலட்சியங்களுடன் வாழ்ந்த நாவலரைப் போலல்லாது புராணபடனம் செய்வதிலும், இரசனை கூறுவதிலும் பெரும் பொழுதைக் கழித்த பிள்ளையவர்கள் புராணங்களுக்கு உரை விளக்குவதில் நாவலரிலும் ஓர்படி மேல்என்று கூறலும் பொருந்தும். நாவலர் ஆரம்பித்த இப்புராணபடன மரபினைச் சமய, பக்தி எல்லைகளைத்தாண்டி இலக்கிய ரசனைக்குமானகளமாக ஆக்கினார். பொன்னம்பலம்பிள்ளை நாவலரது சைவப்பிரசங்கங்கள் ஒலித்த வண்ணைச் சிவன்கோவிலிலே பொன்னம்பலபிள்ளையது புராணபடனமானது யாழ்ப்பாணத்தில் சமூக அந்தஸ்து, கல்வித்தரம் தூரம், வயது என்பவற்றைக் கடந்து சகலரையும் கவர்ந்து இழுக்கின்ற ஓர் பெரும் சக்தியாக மாறியது. பொன்னம்பலம்பிள்ளையினுடைய புராணபடனம் நடைபெறும் வண்ணைச் சிவன் கோவில் வசந்த மண்டபம் மக்கள் கூட்டத்தினால் நிறைந்து வழிந்ததாகவும் அவரது மனோநிலையைப் பொறுத்து அவரது உரைக்கருத்துக்களும் புதியனவாய் ஊற்றெடுத்துப் பிரவாகித்தன என்றும் அக்கால அறிஞர் கூறுவர். வித்துவசிரோமணியின் ரசனைத் திறன்,

> ''உச்சியிலிருந்து உள்ளங்கால் பரியந்தம் உள்ளங்காலிலிருந்து உச்சி பரியந்தம் பொன்னம்பலம்பிள்ளையின் உருவமே இலக்கிய ரசனையால் ஆனது. தனிக் கற்கண்டிற் செய்த பலகாரம் போன்று இலக்கிய ரசனை மயமாயிருந்தார். பொன்னம்பலம்பிள்ளை எந்த நேரத்திலோ புதிது புதிதாகத் தமக்குத் தோன்றுகின்ற இலக்கிய ரசனையை யாருக்காவது வெளிப்படுத்தாமல் இருக்கமாட்டாமை பொன்னம்பலம்பிள்ளையின் நித்திய கல்யாண குணம். பொன்னம்பலம்பிள்ளை இந்த மாட்டாமையாகிய ரசகுணத்தை ஒருவாறு தணித்து தணித்து முட்டுத் தீர்வதற்கு உபகார ஸ்தலங்களாய்ப் புராண படனம் நடைபெறுகின்ற முக்கிய சைவாலயங்கள் அமைந்திருந்தன''2

என்று வருணிக்கப்பட்டுள்ளது. புராணபடனங்கள் நடைபெறுகின்ற முக்கிய ஸ்தலங்களிலே பொன்னம்பலபிள்ளையின் ரசனைத் திறமையைக் காண முடிந்தது. கந்தபுராணம் வியாக்கியானம் செய்யும்போது கம்பராமாயணம், சீவகசிந்தாமணி, தணிகைப்புராணம் முதலிய காவியரசனைகளையும் ஏற்ற ஏற்ற இடங்களிலே அவர் எடுத்து விளக்குவது கேட்போருக்கு உவகையூட்டும் வகையில் அமைந்தது. வாசிக்கும்போதும், பொருள் கூறும்போதும் ஒருசிறு தவறு நேர்ந்தாலும் அக்காலத்துப் பெண்கள் பிழையை இனம் கண்டுகொள்வார்கள் என்ற அச்சம் புராணபடனம் நடத்துவோருக்கு இருந்ததாகவும், இதனால் மிகவும் அவதானமாகவே புராணப்படிப்பை நடத்தினர்கள் எனவும் அறிவதிலிருந்து. பெண்கள் மத்தியிலே கந்தபுராணம் எந்த அளவிற்குப் செல்வாக்குப் பெற்றிருந்தது என்பதை உணரமுடிகின்றது. மேலும் பொன்னம்பலம்பிள்ளை பொருள்கூறி ரசனை கூறுமிடத்து நினையாப் பிரகாரம் இதுவரை கூறியதிலிருந்து வேறொரு பிரகாரம் வியாக்கியானம் செய்து விடுதலுமுண்டு. இதனை

> *அலையலையாய்ப் பொன்னம்பலம்பிள்ளையின் வாயிலிருந்து புதிய புதிய விளக்கங்களைக் கேட்டுக்கொண்டு வைத்தகண் வாங்காது அவரையே பார்த்தபடி ரசனையில் மூழ்கியிருந்தனர். அவர் சொல்லும் பொருளும் கேட்போர் உள்ளங்களைப் பிணித்தன.3*

என்ற கூற்று உணர்த்துகிறது. இவர் காலத்திலே புராணபடனம் ஜனரஞ்சகப்படுத்தப்பட்டுச் சாதாரண மக்கள் வாழ்கையோடு இரண்டறக் கலந்து விளங்கியது. யாழ்ப்பாணத்தின் பிறபகுதிகளாகிய மட்டுவில், கோப்பாய், புன்னாலைக்கட்டுவன், சுன்னாகம் ஆகிய பகுதிகளிலிருந்தும் ஆர்வமுள்ளோர் வண்ணார்பண்ணைக்கு வந்து இவரிடம் ரசனை கற்றார்கள். இலங்கையில் மட்டுமன்றித் தென்னிந்தியாவிலும் இவர் புகழ் பரவியிருந்தது. மதுரைத் தமிழ்ச்சங்கத்துத் தாபகராகிய பாண்டித்துரைத் தேவர் (1867-1911) யாழ்ப்பாணத்திலிருந்து இராமனாதபுரம் சமஸ்தானத்துக்குப் போகின்ற வித்துவான்களிடம் பொன்னம்பலம்பிள்ளை பற்றியும் அவரது வியாக்கியானங்கள் பற்றியும் கேட்டுரசிப்பவர் என்று அறிவதிலிருந்து பிள்ளை அவர்களது புகழை அறியமுடிகின்றது.

இலங்கையிலும், தென்னிந்தியாவிலும் புராணபடனம் செய்வதில் வல்லவராகப் போற்றப்பட்ட பொன்னம்பலம்பிள்ளையின் மாணவர்களுள் கந்தர்மடம் சுவாமிநாத பண்டிதர் முக்கியமான ஒருவராவர். தனது ஆசிரி

ருடன் அவர் புராணபடனம் செய்த கோயில்களுக்கும் மடங்களுக்கும் சென்ற பண்டிதர் காலகதியில் பொன்னம்பலம்பிள்ளை போலவே பிரசங்கம் செய்வதில் வல்லவராகிவிட்டார். இக்காலப்பகுதிலே தேவகோட்டை, நாட்டுக்கோட்டை முதலிய செட்டிநாட்டு வர்த்தகர்கள் இலங்கையில் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தனர். பொருள்வளம்மிக்க இவ் வர்த்தகர்கள் இங்குள்ளவர்களைச் செட்டிநாட்டுக்கு அழைத்துப் புராணபடனம், சைவப் பிரசங்கம் என்பன ஆற்றுமாறு வேண்டிக்கொள்ளும் வழக்கம் இருந்தது. இலங்கையில் இருந்து செட்டிநாட்டுக்குச் செல்லும் பெரியோர்களை ஆதரித்துப் பொன்னும், பொருளும் கொடுத்துக் கௌரவிப்பதில் இவ்வர்த்தகர்கள் பெரும் ஆர்வம் காட்டினர். இவ்விதமாகக் காலியில் வியாபாரம் செய்த செட்டிமார் பொன்னபலம்பிள்ளையவர்களைக் காலிச் சிவன்கோவிலிற் பெரியபுராணபடனம் செய்வதற்கு அழைத்தார்கள். அங்கு செல்ல முடியாமலிருந்த பிள்ளையவர்கள் தனது மாணவனாகிய சுவாமிநாத பண்டிதரை அனுப்பிவைத்தார். காலியில் புராணபடனத்தை வெற்றியுடன் நடத்தி யாழ்ப்பாணம் மீண்ட சுவாமிநாதபண்டிதருக்குச் செட்டிநாட்டிலிருந்து புராணபடனம் நிகழ்த்துமாறு அழைப்புக்கள் வந்தன. அதுமட்டுமின்றிப் புராணபடனத்திலே திருப்தியுற்ற செட்டிமார் தமது பிள்ளைகளுக்கு இவரைக் கல்விகற்பிக்குமாறு கேட்டுக்கொண்டதற்கிணங்க இவரும் சிலகாலம் செட்டிநாட்டிலே தங்கியிருந்தார். சுவாமிநாத பண்டிதரது புராணபடனச் சிறப்பே அவருக்குத் தென்னிந்தியாவிலே புகழைத் தேடிக்கொடுத்தது. அங்கு தங்கியிருந்த காலத்திலே ஆதீனங்களுடனும் புலவர்களுடனும் தொடர்பு கொண்டு தனது புகழை மேலும் பரப்பினார். புராணபடனம் நிகழ்த்தும் திறமையில் இவர் பொன்னம்பலம்பிள்ளைக்கு நிகரானவராக விளங்கினார். பிள்ளையவர்கள் காலத்திலே மக்கள் மத்தியில் பிரபல்யம் பெற்று விளங்கிய புராணபடன மரபு சுவாமிநாத பண்டிதர் காலத்திலே பொதுமக்களால் ஊக்குவிக்கப்பட்டு இலங்கையில் மட்டுமல்லாது, தென்னிந்தியாவிலும் சிறப்பிக்கப்பட்டது, ஈழத்தவர்களது திறமையை உணர்த்தப் போதிய சான்றாகும்.

இம்மரபானது ஈழத்தவர்கள் பலரால் தொடர்ந்து நடத்தப்பட்டது. உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளை, மேலைப்புலோலி ந. கதிரவேற்பிள்ளை தில்லைநாதநாவலர், ஊரெழுச் சரவணமுத்துப்பிள்ளை, வேலணை வி. கந்தப்பிள்ளை போன்ற புராணபடனம் சிறப்பாக நிகழ்த்தியோருட் சிலராவர். ஆறுமுகநாவலர், பொன்னம்பலம்பிள்ளை போன்றவர்களது புராணபடனத்தைச் செவிமடுத்தும், அறிந்தும் இருந்த இவர்கள் தத்தமது ஊர்களில் மட்டுமன்றி வெளியூர்க்கோவில்களிலும் புராணபடனம் செய்தனர். சிலர் சிங்கப்பூர்வரைகூட புராணபடனம் செய்யச் சென்று வந்துள்ளனர். ஒவ்வொருவரும் எங்கெங்கே புராணபடனம் செய்தார்கள் எந்தப் புராணத்தைப் படித்தார்கள் என்பதனை விரிவாக ஆராயாது இவர்களால் இம்மரபு தொடரப்பட்டது என்பதனை மனங்கொண்டு, இம்மரபானது இன்று ஏன் பொதுமக்கள் செல்வாக்கை இழந்து வெறும் சடங்காக மட்டுமே நிலவுகின்றது என்பதனை ஆராய்தலே இங்கு பொருத்தமானதாகும். இன்றும் புராணபடனம் கோயில்களிலே நடைபெறுகின்றது. பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை இதனை,

> ''வருடத்தில் மூன்றுமாச காலம் கந்தபுராண காலமாயிருக்கும். ஆண்களும், பெண்களும் மூன்றுமாச காலம் காப்புக்கட்டியிருந்து கேட்பார்கள். ஒரு கிராமத்தில் பல கோயில்கள் இருக்கும்......படித்துப் பொருள் சொல்லுகிறவர்கள் தத்தம் கிராமத்திலும், அயற் கிராமங்களிலும் சென்றுசென்று, படித்துப் பொருள் சொல்லிவருவார்கள். படித்துப் பொருள்சொல்லும் முறை யாழ்ப்பாணத்துக்கே உரிய தனிப்பட்டமுறை...... முதல் பதப்பொருள், பின் பொழிப்புரை அதன்மேல் விசேடஉரை சொல்லப்படும். விசேட படிப்புக்கு பிரசித்த வித்துவான்கள் அழைக்கப்படுவார்கள்.''4

என்று கூறுவதிலிருந்து கிராமங்களில் புராணப் படிப்பு முறையாக நடைபெறுகின்றதென்பதும் உரைகூறுபவர் புராணத்தை நன்குவிளங்கி பத உரை, பொழிப்புரை விசேடஉரை, எனப் பகுத்து உரை கூறுகின்ருர்கள் என்பதும் அறிய முடிகின்றது. இவ்வாறு விரதமிருப்போர் காப்புக்கட்டி முறையாகக் கோவில்களில் இருந்து புராணபடனத்தைக் கேட்டபோதும், அப்புராணப்படிப்பானது சைவப்பிரசங்கங்கள் பெற்றுள்ள செல்வாக்கைப் பெருது வெறும் சம்பிரதாயமான ஒரு நிகழ்வாகவே ஆலயங்களில் நடைபெறுகின்றது. இதற்கான காரணங்களை நாம் ஆராயும்போது கந்தபுராண வியாக்கியானம் என்ற சுன்னுகம் குமாரசாமிப் புலவரது (1854 – 1922) கண்டனம் மனங்கொள்ளத்தக்கதாகும்.

> ''நீங்கள் எத்தனையோ ஆண்சனங்களும், பெண் சனங்களும் புராணம் கேட்டற்கண் நம்பிக்கையோடும் வந்து உங்கள் வாய்களையே எதிர்பார்த்திருக்க, நீங்கள் அவர்களுக்குக் கொஞ்சமும் விளங்காமல் வெளிப்படையான இயற்சொற்களை எல்லாம் திரிசொற்களாக மாற்றிச் சொல்கிறீர்கள் ...... சித்தியாரிற் சில செய்யுட்களையும் அவற்றின் கடின வாக்கியமமைந்த வியாக்கியானங்களையும் எடுத்துப் படிக்கின்றீர்கள் ..... எத்தனையோ சனங்கள் ஏன் இங்கு வந்தோம் என்று பெருமூச்சுவிட நீவிர் ஒரு மூச்சும் விடாமல் வாணன் கோவையையும், திருக்கோவையையும் படிக்கிறீர்கள் ..... உங்கள் விருத்தியுரையிற் சில விடங்களிற் ''செற்றினையிடியுந்தேனும்'' என்னும் பாட்டு வர வைகறை விடியல் செல்ல மற்ற நாளிலும் மத்தியானமாகிறதே''5

என்ற கூற்று ஊரைகாரரது குறைபாட்டினை எமக்கு விளக்குகின்றது. இக்காலப்பகுதியிலே விரிவுரை கூறியவர்கள் பொதுமக்களது ரசனையைக் குறைக்கக் கூடிய விதத்திலே மக்களிலிருந்து அப்பாற் சென்று தமக்குத் தெரிந்த நூல்களிலிருந்து மேற்கோள் காட்டினர். தமது வித்துவத்தைக் காட்டப் புராணபடனத்தை ஒரு கருவியாகக் கொண்ட இக்காலப்பகுதியில் புராண படனம் ரசனை குறைந்தாக மாறத் தொடங்கியதில் ஆச்சரியமில்லை. புராண படனத்துக்குச் சென்ருேர் 'ஏன் வந்தோம்' என்று பெருமூச்சுவிடும் அளவிற்கு அது ரசனை குறைந்ததாய் மாறிவிட்டது. இவ்வாறு புராணபடனம் நிகழ்த்தியோரிடம் காணப்பட்ட குறைபாடுகளோடு கூடவே சமுதாயத்தில் ஏற்பட்ட சிற்சில மாறுதல்களும் புராணபடனம் செல்வாக்கு இழக்கக் காரணிகளாகின.

ஆங்கிலேயர் காலத்திலே நிறுவப்பட்ட பாடசாலைகளுக்கு எதிராக, நாவலராலும் அவரது மரபினராலும் சைவத்தமிழ்ப் பாடசாலைகள் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் நிறுவப்பட்டன. இப் பாடசாலைகளுக்குச் சென்று கல்வி விழிப்பினைப் பெற்றவர்கள் புராணபடனங்களைக் கேட்பதற்குக் கோவில்களுக்குச் செல்ல வேண்டிய தேவையிருக்கவில்லை. நாவலர், பொன்னம்பலம்பிள்ளை போன்றவர்களது காலங்களிலே கல்வியறிவற்ற பெண்கள் புராணபடனம் மூலமாகவே சமயநூல்களை அறிந்தனர். ஆனால் கல்வி விழிப்பினைப்பெற்ற இவர்கள் சமயநூல்களைப் படித்து, அவற்றை விளங்கிக்கொள்ளும் அறிவினைப் பெற்றுவிட்டனர். இதனால் ஒருவர் புராணம் படிக்க ஒருவர் அதற்கு உரைசொல்லவேண்டிய தேவை சுருங்கிவிட்டது. இதனால் வாய்மொழி, கேள்விஞானம் பிரபல்யம் பெற்றிருந்த நிலைமை மாறித் தானாகவே படித்து ரசிக்கும் நிலைமை தோன்றியது.

இதே நேரத்திலே மக்கள் மத்தியில் புதிய ஓர் உணர்ச்சி ஏற்பட்டது. இதுவரை கோவில்களில் உற்சவ காலங்களிலும், விசேடதினங்களிலும் ஆடல், பாடல் முதலிய கேளிக்கை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. பெரிய மேளம், சின்னமேளம் என்ற பெயரில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிகளை ஒழித்துக்கட்டி அவற்றுக்குப் பதிலாகச் சமயச் சொற்பொழிவுகளை நிகழ்த்த வேண்டும் என்று மக்கள் விரும்பினர். திருவிழாக் காலங்களில் தொடர்ச்சியாக இராமாயணம், கந்தபுராணம், பெரியபுராணம் போன்ற சமய நூல்களின் சிலபகுதிகள் மக்களுக்கு எளிதில் விளங்கக் கூடியமுறையில் சொற்பொழிவுகளாக்கப்பட்டுச் சமயப் பிரசங்கங்களாக நிகழ்த்தப்பட்டன. மக்கள் இவற்றை விரும்பிக் கேட்டனர். இவை புராணபடனம் கேட்பதிலும் பார்க்க விளங்கிக் கொள்வதற்கு இலகுவாக இருந்தன. இக்காரணங்களால் சமயச் சொற்பொழிவுகள் மக்களது செல்வாக்கைப் பெறத் தொடங்கிவிட்டன.

இத்தகைய அகக்காரணிகள் புராணபடனம் செல்வாக்கிழக்கக் காரணங்களாயமைந்த அதே நேரத்தில் புறக்காரணிகள் சிலவும் புராணபடனத்தின் செல்வாக்கைக் குறைத்தன. இவற்றுள் வெகுஜனத் தொடர்பு சாதனங்களாகிய சினிமா, வானொலி, தொலைக்காட்சி போன்றவற்றைக் குறிப்பிட்டுச் சொல்ல முடிகின்றது. புராணக்கதை ஒன்றை நவரசங்களுடன் படமாகப் பார்க்கமுடிகின்றது. அங்கே பொதுமக்களைக் கவரக்கூடிய இசை, நடனம், உடையமைப்பு, கோவில் காட்சிகள் யாவும் ஒருங்கே காட்டப்படுவதால் மக்கள் அவற்றை விரும்பிப் பார்க்கத் தொடங்கினர். இவ்வாறே வீட்டில் இருந்தபடியே வானொலியில் புராணக்கதை ஒன்றினைக் கதாகாலட்சேபமாகக் கேட் கும் வாய்ப்பும் பொதுமக்களுக்குக் கிடைத்தது. ஒரு காலகட்டத்தில் கோவில்களில் மட்டுமே பெறக்கூடியதாயிருந்த சமய அறிவு பல்வேறு சாதனங்களாலும் பெறக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. இவற்றுக்கெல்லாம் சிகரம் வைப்பதுபோல இன்றைய உலகம் அவசர உலகமாக மாறிக் கொண்டிருக்கிறது. ஆறுதலாகக் காரியம் பார்க்கும் பண்பு குறைந்து எதற்கெடுத்தாலும் 'நேரமில்லை' என்ற தாரக மந்திரத்தில் உலகம் இயங்குகிறது. இத்தகைய உலகில் வாழும் மனிதனுக்குப் புராண படனம் கேட்கும் மனோநிலை இல்லை. கோவிலில் இருந்து ஒருவர் படிக்கும் புராணத்தையும், அதற்கு இன்னொருவர் கூறும் உரை விளக்கத்தையும் கேட்கச் செலவழிக்கும் நேரத்திற்குத் தானாகப் பல நூல்களைப் படித்துவிட

முடியும் என்றும், பல காரியங்களைச் செய்துவிட முடியும் என்றும் அவன் எண்ணுகின்றான். புராணப்படிப்பு நடைபெறும்போது கோவில்களில் இருந்து அப்படிப்பைக் கேட்கும் மக்களே இதற்குச் சான்றுபகர்கின்றனர். வயதுமுதிர்ந்த ஒரு சிலரன்றி, இளைஞர் இப்புராணபடனத்தைக் கேட்பது வெகு குறைவு. இதற்கு இவையே காரணமாகும். புற உலகும், அக உலகும் மாறிவிட்டமையை இது காட்டுகின்றது.

ஆகவே ஒரு காலப்பகுதியிலே பொதுமக்கள் மத்தியில் வெகுசெல்வாக்குப் பெற்று பொதுமக்களால் வளர்க்கப்பட்ட புராணபடனம் இன்று வெறும் சடங்காக மட்டுமே நடைபெறுகின்றது. மக்களது சமயவாழ்வோடு ஒன்றிணைக்கப்பட்டுப் பிரிக்க முடியாத அம்சமாக விளங்காது, கோவில்களிலே நடைபெறவேண்டிய ஒரு அம்சமாகவே நடத்தப்படுகின்றது. இதற்குப் புராணம் படிப்போரின்மீது காணப்பட்ட குறைபாடுகளோடு, சமுதாயத்தில் ஏற்பட்ட மாறுதல்களையும் காரணங்களாகக் கொள்ளவேண்டும்

---

## அடிக்குறிப்புகள்

1. சுன்னாகம் முத்துக்குமார கவிராசர். ஞானக்கும்மி, யேசுமதபரிகாரம், கு. அம்பலவாணபிள்ளையால் பதிப்பிக்கப்பட்டன. *1926, பக். 37*
2. கணபதிப்பிள்ளை, சி. **கந்தபுராண கலாசாரம்,** *யாழ்ப்பாணம் ஸ்ரீசண்முகநாத அச்சகம், 1959. பக். 26*
3. மேற்படி *பக். 28*
4. மேற்படி *பக். 15*
5. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை. கு. **குமாரசாமிப்புலவர் வரலாறு.** சுன்னாகம், திருமகள் *அழுத்தகம், 1970, பக். 49*

## சிந்தனை நிரந்தர வைப்பு நிதிக்கு
### கொடை உதவியோர் பட்டியல்

| | |
|---|---|
| மஹாராஜஸ்ரீ சண்முகநாதக் குருக்கள்<br>*மாவை ஆதீனகர்த்தா* | 5,000-00 |
| திரு. ரி. குமாரசாமி ஜவுளி நிறுவனம்<br>*42, 44, பலாலி வீதி, யாழ்ப்பாணம்* | 5,000-00 |
| பொ. கந்தசாமி<br>*மஞ்சவனப்பதி, கொக்குவில்* | 5,000-00 |
| பேராசிரியர். இ. கனகசுந்தரம், மருத்துவபீடம்<br>*யாழ் பல்கலைக் கழகம்* | 5,000-00 |
| சீமாட்டி நிறுவனம்<br>*மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்* | 2,500-00 |
| கணேசன் ஸ்ரோர்ஸ் | 1,001-00 |
| விமாகி நிறுவனம்<br>*27/3, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்* | 1,001-00 |
| க. கதிரவேற்பிள்ளை<br>*நீதிபதி, கிளிநொச்சி* | 1,000-00 |
| முருகன் உபயம் | 500-00 |
| செ. அஞ்சலாதேவி மூலம் பரந்தன், கிளிநொச்சி, சாவகச்சேரி அன்பர்கள் அளித்த நன்கொடை | 2,581-00 |
| | 28,583-00 |

—o—

# CINTANAI

**Vol. I. (New Series) JULY 1983 No. II**

CONTENTS

Concept of "Spoken Tamil" and "Literary Tamil" in Tamil language Text Books - A Review.

— **S. Suseendrarajah**

Proportional representation and political aspects of the Tamil speaking minorities.

— **S. Manivasakar**

An evaluation of the role of technology in raising productivity in the dryzone colonisation schemes.

— **A. Kanapathippillai**

Political activities of the Jaffnese in British Malaya.

— **S. Sathiaseelan**

Teaching of Tamil language in the primary classes: Some basic problems.

— **M. A. Nuhman**

Traditional system of education in 19th centuary Jaffna.

— **S. Sivalingarajah**

Population mobility in the Jaffna district.

— **K. Kugapalan**

Land and colonization problems in Amparai district.

— **M. V. Mohamad Siddeek**

Yaksa and Naga worship in ancient Sri Lanka.

— **S. K. Sitrampalam**

Navalar and Saivasiddhanta.

— **Kalaivani Ramanathan**

Recitation of puranas - then and now.

— **Yogeswari Ganeshalingam**

# சந்தாப் படிவம்

நிர்வாக ஆசிரியர்,
சிந்தனை,
நூலகம்,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,
திருநெல்வேலி,
இலங்கை.

சிந்தனை, மூன்று இதழ்களுக்கான சந்தாப்பணம் அனுப்பியுள்ளேன். இத்துடன் காசுக்கட்டளை / காசோலை / தபாற்கட்டளை / பணம் அனுப்பிவைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| இலங்கை | ரூபா | 60-00 |
| இந்தியா (இந்திய ரூ.) | ரூபா | 60-00 |
| வேறு நாடுகள் | £ 6-00 | $ 12-00 |

(தபாற்செலவு உட்பட)

பெயர்..........................................................................................

முகவரி.......................................................................................

நாடு..................................................

திகதி.......................................

கையொப்பம்.........................................

## Subscription Form

Managing Editor,
**Cintanai,**
The Library,
University,
Thirunelvely,
Sri Lanka.

Please send me 3 issues of Cintanai to my address given below. I enclose a Cheque / Bankers order / M. O. / P. O. in your name for Sri Lanka Rs. 60/-, India Rs. (Ind. Rs.) 60/-, other countries £ 6-00 / $ 12-00 per year. (Postage included)

**Name**..........................................................................................

**Address**.....................................................................................

**Country** ..................................................

**Date**.......................................

**Signature**.........................................